செ.வெ.எண்: 42 நாள்:16.11.2017

# திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாவட்ட வணிக வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் கைவினை உற்றபத்தி பொருட்கள் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

-------

திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள வேய்ந்தான்குளம், மாவட்ட வணிக வளாகத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின்ள கைவினை உற்பத்தி பொருட்கள் கண்காட்சி 16.11.2017 முதல் 27.11.2017 முடிய நடைபெறவுள்ளது. இக்கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.11.2017) குத்து விளக்கேற்றி வைத்து, துவக்கி வைத்தார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் சார்பில் மாவட்ட வணிக வளாகத்தில் 16.11.2017 முதல் 27.11.2017 முடிய மகளிர் சுயஉதவிக் குழுக்களின்ள கைவினை உற்பத்தி பொருட்கள் கண்காட்சி காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறும். இக்கண்காட்சியில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கைவினை உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இக்கண்காட்சியில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 23 மகளிர் சுயஉதவிக் குழுக்களும், பிற மாவட்டங்களிலிருந்து 17 மகளிர் சுயஉதவிக் குழுக்களும் இணைந்து, குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய சுமார் 40 அரங்குகள் அமைத்துள்ளனர்.

மேலும், இக்கண்காட்சியில், இராமநாதபுரம்–கடற் சிற்பி, பனை ஓலை, மதுரை–அலங்கார பொருட்கள், கை கடிகாரம், திருவள்ளூர்–கவரிங் நகைகள், தஞ்சாவூர்–பேக், திண்டுக்கல்–டெரகோட்டா, சேலை வகைகள், தூத்துக்குடி–மீன் ஊறுகாய், நீலகிரி–நீலகிரி தைலம், குரமிளகு, காஞ்சிபுரம்– சணல் கோப்பு, திருப்பூர்–டாய்ஸ், நாமக்கல்–டவல், திருச்சி–மூலிகை பொருட்கள், கன்னியாகுமரி–வாழைநார், வேலூர்–நரிகுறவர் பாசிமணி, திருநெல்வேலி மாவட்டம்–கற்றாழை நார் பொருட்கள், பத்தமடை பாய் பொருட்கள், சுடுமண் பொம்மைகள், கால் மிதியடிகள், பனைஓலை பொருட்கள், பர்ஸ் வகைகள், பலகாரங்கள், மர சாமான்கள், அழகு ஆபரணங்கள் காட்டன் சேலைகள், நைட்டி வகைகள் மற்றும் பொம்மை வகைகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்து குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், இணை இயக்குநர் / திட்ட அலுவலர் திருமதி.த.கெட்சி லீமா அமலினி, உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் விற்பனை சங்க மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.